**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**முன்னிலை: திரு. எம்.தனபால், பி.ஏ.,பி.எல்.,**

**சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**

**2023–ஆம் வருடம் மார்ச் மாதம் 16 ஆம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.119/2023**

**in**

**Original Suit No.944/2022**

**(CNR No.TNDG19-003469-2022)**

**----**

பழனியம்மாள் ...... மனுதாரர்/3 ஆம் நபர்

/எதிர்/

1. V. பழனிச்சாமி
2. P. சுந்தரம் .....1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. V. தங்கவேல்
4. T. சுரேஷ் ...... 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனுவானது கடந்த 03.02.2023 ஆம் தேதி அசல்வழக்கு எண்.944/2022–இல் இ.ம. எண்.119/2023 ஆக இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர்/3 ஆம் நபர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.நாட்டுத்துரை அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.திருமலைசாமி அவர்கள் முன்னிலையாகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.கே.முருகேசன் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்குட்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கலான,

**உத்தரவு**

**1.** மனுதாரரை அசல்வழக்கில் 3 ஆம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டி இந்த மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1, விதி 10(2) மற்றும் 151–இன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண பத்திரிக்கையின் சுருக்கம். :–**

மனுதாரர்/3 ஆம் நபர், 1 ஆம் எதிர்மனுதாரரும், 3 ஆம் எதிர்மனுதாரரும் மனுதாரரின் உடன்பிறந்த சகோதரர்கள் என்றும், தாவா சொத்துக்கள் மனுதாரர் மற்றும் 1, 3 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான இறந்துபோன வஞ்சியப்பகவுண்டரின் தகப்பனார் கருப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றும், கருப்பணகவுண்டர் இறந்தபின்பு வஞ்சியப்பகவுண்டருக்கும், வஞ்சியப்பகவுண்டரின் காலத்திற்கு பின்பு மனுதாரரும், தனது சகோதரர்களும் அடங்கிய பொதுக்குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சொத்துக்களை பொதுக்குடும்ப சொத்துக்களாக வைத்து அனுபவித்து வருகிறோம் என்றும், பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களை தனது தகப்பனார் மேற்பார்வை பார்த்து வந்து, அவரது காலத்திற்கு பின்பு சகோதரர்களான 1, 3 எதிர்மனுதாரர்கள் பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களை மேலாண்மை செய்து வந்து தனக்கு பொதுக்குடும்ப சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தில் பங்கு பாத்தியம் செலுத்தி வந்துள்ளார்கள் என்றும், பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களை பொறுத்து பொதுக்குடும்ப உறுப்பினர்களுக்குள் யாதொரு முறையான பாகப்பிரிவினை ஆவணங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்றும், இந்து வாரிசுரிமைச்சட்டம் 2005–இன்படி தனக்கு தாவா சொத்துக்களில் பொதுவில் 1/3 பங்கு பாத்தியம் கிடைக்கக்கூடியதாகும் என்றும், 1, 3 எதிர்மனுதாரர்கள் எனக்குரிய பங்குத்தொகையை செலுத்தாமல் வந்ததினால், பொது மனிதர்களை வைத்து பைசல் பேசியதில் சொத்துக்களை பிரித்து கொடுக்காது இருந்து வந்ததில் சொத்துக்களை பொறுத்து வில்லங்கம் போட்டு பார்த்ததில் 1, 3 எதிர்மனுதாரர்கள் தங்களுக்குள் கடந்த 19.01.2009–இல் மோசடியாக பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களில் தனக்குள்ள பங்கு பாத்தியத்திற்கு விரோதமாக ஒரு பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்படுத்தியது தெரிய வந்ததாகவும், மனுதாரர், தனது சகோதரர்கள் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு எதிராக திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் தனக்குரிய 1/3 எதிர்மனுதாரர்கள் கடந்த 19.01.2009–இல் தனது உரிமைக்கு எதிராக ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும், இதர பிற பரிகாரங்கள் வேண்டியும் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கானது பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில்

அ.வ.எண்.390/2022–இல் நிலுவையில் இருந்து வருகிறது என்றும், எதிர்மனுதாரர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தினை ஊர்ஜிதம் செய்யும்வகையிலும், சொத்துக்களில் தனக்குரிய பங்கு பாத்தியத்தை மோசடி செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும் தங்களுக்குள் இந்த தாவா தாக்கல் செய்துள்ளது தெரிய வந்ததாகவும், தாவா சொத்துக்களில் 1/3 பங்கு பாத்தியம் உள்ள நபரான தான் அசல்வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் என்பதாலும், அசல்வழக்கில் தன்னை 3 ஆம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த வேண்டியுள்ளது என்றும், இல்லாதுபோனால் தாவா சொத்துக்களில் தனக்குள்ள உரிமை முழுவதும் பாதிக்கப்பட்டு பெருத்த பொருள் இழப்பும், கஷ்ட நஷ்டமும் ஏற்படக்கூடும் என்றும், எனவே மனுதாரரான தன்னை அசல்வழக்கில் 3 ஆம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டி மனுதாரரால் இந்த மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>3. 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்மனு உரையின் சுருக்கம்:</u>

இந்த மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல மற்றும் நிலைக்கத்தக்கதல்ல எனவும், இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற அனைத்து சங்கதிகளை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும், தாவா சொத்துக்களின் ஒரு பகுதி சொத்துக்கள் தங்களது பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களாக இருந்து வந்ததை பொறுத்து தானும், 2 ஆம் எதிர்மனுதாரர் மற்றும் தனது மகள் சுமதி என்பவர் ஒரு தரப்பாகவும், உடன்பிறந்த தம்பி தங்கவேல் அவரது மகன் சுரேஷ் ஒரு தரப்பாகவும் சென்ற 19.01.2009 ஆம் தேதி பாகப்பிரிவினை பத்திரம் எழுதி சொத்துக்களை பிரிவினை செய்து அனுபவித்து வருகிறோம் என்றும், தனது மகள் சுமதி மேற்படி சொத்துக்களில் அவருக்குள்ள பாகத்தை பொறுத்து தங்கள் இருவருக்கும் ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி பாத்தியப்படுத்தி வைத்துவிட்டார் என்றும், தனது மனைவி கருப்பாத்தாளும் தமக்கு பாத்தியப்பட்டிருந்த தாவா சொத்துக்களின் இன்னொரு பகுதி சொத்துக்களை பொறுத்து தங்கள் பெயருக்கு அதே தேதியில் இன்னொரு செட்டில்மெண்ட் பத்திரம்

எழுதி பாத்தியப்படுத்தி வைத்துவிட்டார் என்றும், தாவா சொத்துக்களில் தங்களது பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்கள் அல்லாமல் தனது மனைவி வழி சொத்துக்களும் அடங்கியுள்ளது, இந்த விபரம் மனுதாரர் மனுவில் மறைக்கப்பட்டுள்ளது என்றும், மனுதாரர் பழனியம்மாள் தனக்கும், 3 ஆம் எதிர்மனுதாரர் தங்கவேலுக்கும் உடன்பிறந்த சகோதரி என ஒப்புக்கொள்ளப்படுகின்றது என்றும், மனுதாரர் வெகுகாலத்திற்கு முன்பே திருமணம் ஏற்பட்டு அந்த கால வழக்கப்படி அவருக்கு தேவையான நகைகள், சீர்வரிசைகளை பெற்றுக்கொண்டு தங்களது தகப்பனார் வழி பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து எவ்வித பாத்தியமோ, பாகமோ தனக்கு தேவையில்லை என்று விலகிப்போய்விட்டார் என்றும், தங்களது தாயார்வழி சொத்துக்களை பொறுத்து தாங்கள் இருவருக்கும் ஒரு பாகபாத்திய விடுதலைப்பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார் என்றும், அசல்வழக்கு சொத்துக்கள் உபயவாதிகளாகிய எதிர்மனுதாரர்களின் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதாகவும், பாகம் பிரித்து 12 ஆண்டுகளுக்கு மேலாகியும் மனுதாரர் அதுபற்றி எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும், பாகப்பிரிவினையில் கிடைத்த சொத்துக்களில் அவரவர் ஆழ்குழாய்கிணறு அமைத்து மேம்படுத்தியும் குடியிருப்புசாளைகள் அமைத்தும் குடியிருந்து அனுபவித்து வருகிறோம் என்றும், 2 ஆம் எதிர்மனுதாரராகிய தனது மகன் வெளியூரில் வேலை பார்த்து வருகிறார் என்றும், மனுதாரரின் மகன் மற்றும் 4 ஆம் எதிர்மனுதாரராகிய 2 ஆம் பிரதிவாதி ஆகியோா மிகவும் சிநேகிதமாகவும், அவர்களுக்கு வரவு, செலவு கூட்டுத்தொழில் செய்து வருகிறார்கள் என்றும், பாகப்பிரிவினை ஆவணத்தில் கண்டபடியும் மற்றும் தனது மனைவி தங்களுக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தபடியும் தாவா சொத்துக்களை அனுபவிப்பதற்கும், பொதுக்கிணறுகளில் அவரவர் பாத்தியப்படி தண்ணீர் ஓட்டி பாய்ச்சுவதையும், பொதுக்கிணற்றிற்கு போக வர உள்ள பாதையை பயன்படுத்துவதையும், தங்களை தொடர்ச்சியாக ஆட்சேபித்ததால் உரிய பரிகாரம் வேண்டி இந்த அசல்வழக்கை பழனி சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தும், தான் இரண்டு பொதுக்கிணறுகளிலும் தண்ணீர் எடுத்து பாய்ச்சுவதை இடைஞ்சல் செய்யக்கூடாது என இடைக்கால மனு தாக்கல் செய்து உள்ளதாகவும், இரண்டு மனுக்களும் தாக்கல் செய்து கோப்பிற்கு எடுக்கப்பட்டு 3, 4 எதிர்மனுதாரர்கள் அவர்களது தரப்பில் ஆஜராகி அசல் எதிர்வாதஉரை தாக்கல் செய்தும், பாகப்பிரிவினை

பத்திரப்படி இரண்டு பொதுக்கிணறுகளிலுமே அவர்களது 1/2 பாகத்தை பொறுத்து தண்ணீர் ஓட்டி அனுபவித்து வருவதை பொறுத்து 1, 2 எதிர்மனுதாராகள் தடை செய்யக்கூடாது என்றும், 3, 4 எதிர்மனுதாரர்கள் குடியிருந்து வருவதை தடை செய்யக்கூடாது என்றும் பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்றும், 3, 4 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்கோருரிமைக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த எதிர்வாத உரையில் பாகப்பிரிவினைப்படி அவர்களுக்குள்ள உரிமையை ஒப்புக்கொண்டும், அவர்களது அனுபவத்தை ஆட்சேபிக்கவில்லை என்றும், இந்நிலையில் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்த இடைமனுவில் தங்களது தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு 3, 4 எதிர்மனுதாரர்களின் தரப்பு இறுதிவிசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டநிலையில், 3, 4 எதிர்மனுதாரர்களின் தூண்டுதலின்பேரில் மனுதாரர், இந்த இடைமனுவை 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள I.A.No.596/2022 மற்றும் I.A.No.597/2022 இரண்டு மனுக்களிலும் தன்னை தரப்பினராக சேர்க்க கோரி தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி இடைமனுக்கள் I.A.No.596/2022 மற்றும் I.A.No.597/2022 ஆகிய மனுக்களின் கருப்பொருளை முடிவு செய்வதற்கோ 3 ஆம் நபர்/மனுதாரர் அவசிய தரப்பினரல்ல என்றும், மனுதாரர், தாவா ஒரு பகுதி சொத்துக்களில் 1/3 பாகப்பிரிவினை கோரி தங்கள் மீது சமூகம் பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.390/2022 என அசல்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்/3 ஆம் நபர் தனது உரிமையை மாவட்ட நீதிமன்ற வழக்கிலேயே நிலைநாட்டி கொள்ளவும், பரிகாரம் பெறவும் முடியும், தற்போது தாவா சொத்துக்களில் தனது நிலத்திலுள்ள பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் இடைஞ்சல் செய்து கொண்டிருக்கும் 3, 4 எதிர்மனுதாரர்கள்தான் இந்த அசல்வழக்கிலும், இடைமனுக்களிலும் தங்களுக்கு உரிய பரிகாரங்கள் கிடைக்கக்கூடாது என்பதற்காக அவர்களோடு இணக்கமாக உள்ள மனுதாரர்/3 ஆம் நபரை தூண்டிவிட்டு பெயர் இரவல் பெற்று மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு துயர்ந்தும், தன்னை தரப்பினராக சேர்க்க கோரும் இந்த மனுக்களையும் தாக்கல் செய்தும் உள்ளார்கள் என்றும், அசல்வழக்கு தாக்கல் செய்து 2 ஆண்டுகள் கழித்து இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இந்த மனுக்கள் மோசடியானதும், பலனற்றதும் என்றும், அசல்வழக்கிலும் பாகப்பிரிவினை

பத்திரத்தின்படி இருதரப்பினரின் உரிமை சம்பந்தப்பட்டதாகும் என்றும், மேற்படி அசல்வழக்கில் என்ன தீர்ப்பு ஏற்பட்டாலும் 3 ஆம் நபர்/மனுதாரரின் உரிமை எந்தவகையிலும் பாதிக்கப்பட போவதில்லை என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு மனுதாரர் அவசிய தரப்பினர் அல்ல என்றும், 3, 4 எதிர்மனுதாரர்களின் தூண்டுதலின்பேரில் சொத்துக்களை அபகரிக்க எத்தனித்து கொண்டும், வழக்கு விசாரணையை இழுத்தடித்து 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு சிரமத்தையும் இழப்பையும் ஏற்படுத்த திட்டமிட்டும் இதுபோன்ற சட்டத்திற்கு எதிரான பலனற்ற மனுக்களை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், எனவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டுமென தெரிவித்து எதிர்மனுஉரை தாக்கல் செய்துள்ளனர்

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**5.** இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>6. பிரச்சனைக்குரிய தீர்வு :–</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் இவ்வழக்கில் 1, 2 எதிர்மனுதாரர்கள் மற்றும் 3, 4 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இடைமனுக்களில் 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரை முடிவுற்று 3, 4 எதிர்மனுதாரர்கள்தரப்பு வாதுரைக்காக இடைமனுக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி அசல்வழக்கில் மனுதாரரை 3 ஆம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கினை மேல்நடத்த உத்தரவிட வேண்டியும் மனுதாரர்/3 ஆம் நபர் இந்த மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**7.** மனுவுடன் கூடிய பிரமாணப்பத்திரிக்கையில் அசல்வழக்கில்

குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் மனுதாரர் மற்றும் 1, 3 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான இறந்துபோன வஞ்சியப்பகவுண்டரின் தகப்பனார் கருப்பணகவுண்டருக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்கள் என்றும், வஞ்சியப்பகவுண்டரின் காலத்திற்கு பின்பு மனுதாரரும், தனது சகோதரர்களும் அடங்கிய பொதுக்குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சொத்துக்களை பொதுக்குடும்ப சொத்துக்களாக வைத்து அனுபவித்து வருகிறோம் என்றும், 1, 3 எதிர்மனுதாரர்கள் பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களை மேலாண்மை செய்து வந்து, தனக்கு பொதுக்குடும்ப சொத்துக்களிலிருந்து கிடைக்கப்பெற்ற வருமானத்தில் பங்கு பாத்தியம் செலுத்தி வந்துள்ளார்கள் என்றும், பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களை பொறுத்து பொதுக்குடும்ப உறுப்பினர்களுக்குள் யாதொரு முறையான பாகப்பிரிவினை ஆவணங்களும் ஏற்படுத்தப்படவில்லை என்றும், இந்து வாரிசுரிமை சட்டம் 2005–இன்படி மனுதாரருக்கு தாவா சொத்துக்களில் பொதுவில் 1/3 பங்கு பாத்தியம் கிடைக்கக்கூடியதாகும் என்றும், மனுதாரர் தாவா சொத்துக்களை பொறுத்து வில்லங்கம் போட்டு பார்த்ததில் 1, 3 எதிர்மனுதாரர்கள் அவர்களுக்குள் 19.01.2009 ஆம் தேதி மோசடியாக பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களில் தனக்குள்ள பங்கு பாத்தியத்திற்கு விரோதமாக ஒரு பாகப்பிரிவினை ஆவணத்தை ஏற்படுத்தியது தெரிய வந்தது என்றும், மனுதாரர் அவரது சகோதரர்கள் மற்றும் அவரது குடும்பத்தாருக்கு எதிராக திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் தனக்குரிய 1/3 எதிர்மனுதாரர்கள் கடந்த 19.01.2009–இல் தனது உரிமைக்கு எதிராக ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றும், இதர பிற பரிகாரங்கள் வேண்டியும் வழக்கு தாக்கல் செய்து பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.390/2022 நிலுவையில் இருந்து வருகிறது என்றும், எதிர்மனுதாரர்கள் அவர்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தினை ஊர்ஜிதம் செய்யும்வகையிலும், சொத்துக்களில் தனக்குரிய பங்கு பாத்தியத்தை மோசடி செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்திலும், அசல்வழக்கு தாக்கல் செய்துள்ளதாக தெரிய வந்ததாகவும், தாவா சொத்துக்களில் 1/3 பங்கு பாத்தியம் உள்ள நபரான தான் அசல்வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் என்பதால் அசல்வழக்கில் தன்னை 3 ஆம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த வேண்டி உத்தரவிட கோரி இந்த மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளதாகவும்

தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8.** 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்மனுஉரையில் தாவா சொத்துக்களின் ஒரு பகுதி சொத்துக்கள் எங்களது பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களாக இருந்து வந்ததை பொறுத்து 1, 2 எதிர்மனுதாரர்கள் மற்றும் 1ஆம் எதிர்மனுதாரரின் மகள் சுமதி ஒரு தரப்பாகவும், 3, 4 எதிர்மனுதாரர்கள் ஒருதரப்பாகவும் இருந்து சென்ற 19.01.2009ஆம் தேதி பாகப்பிரிவினை செய்து அனுபவித்து வருவதாகவும், 1ஆம் எதிர்மனுதாரரின் மகள் அவருக்கு ஒதுங்கிய பாகத்தை 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தி கொடுத்து பாத்தியப்படுத்தியுள்ளார் என்றும், 4ஆம் எதிர்மனுதாரரின் மனைவி கருப்பாத்தாள் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு தானசெட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் பாத்தியப்படுத்தியுள்ளார் என்றும், மனுதாரர் பழனியம்மாள், 1ஆம் எதிர்மனுதாரருக்கும், 3ஆம் எதிர்மனுதாரருக்கும் உடன்பிறந்த சகோதரி என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றும், மனுதாரருக்கு வெகுகாலத்திற்கு முன்பே திருமணம் ஏற்பட்டு பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து எவ்வித பாத்தியமோ, பாகமோ தனக்கு தேவையில்லை என்று விலகி போய்விட்டார் என்றும், 1, 3 எதிர்மனுதாரர்களின் தாயார் வழி சொத்துக்களை பொறுத்து தங்களுக்கு பாகபாத்திய விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், பாகப்பிரிவினையில் கண்டுள்ள சொத்துக்களை அவரவர் பாகத்தை அவரவர் சொத்துக்களை மேம்படுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றும், அதனால்தான் பாகப்பிரிவினை ஏற்பட்டு 12 ஆண்டுகளுக்கு மேலாகியும் மனுதாரர் எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்றும், மனுதாரரின் மகன் மற்றும் 4ஆம் எதிர்மனுதாரராகிய 2ஆம் பிரதிவாதி ஆகியோர் மிகவும் சிநேகிதமாகவும், அவர்களுக்குள் வரவு செலவு கூட்டுத்தொழில் செய்து வருகிறார்கள் என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள், பாகப்பிரிவினைப்படி கிடைத்த சொத்துக்களையும், 1ஆம் எதிர்மனுதாரரின் மனைவி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கொடுத்த சொத்துக்களை பாகப்பிரிவினையில் கண்டுள்ளபடி அனுபவிப்பதை 3, 4 எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்ததால் 1, 2 எதிர்மனுதாரர்கள் அசல்வழக்கையும், இடைமனுக்களை தாக்கல் செய்து 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்கோருரிமை தாக்கல் செய்யப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள்தரப்பு வாதுரை

முடிக்கப்பட்டு, 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரைக்காக இடைமனுக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் 3, 4 எதிர்மனுதாரர்களின் தூண்டுதலின்பேரில் மனுதாரர், தாவா சொத்துக்களில் 1/3 பாகம் உள்ளதாக குறிப்பிட்டும், அசல்வழக்கு எண்.390/2022 திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் நிலுவையில் இருப்பதாக குறிப்பிட்டும், தான் இந்த வழக்கிற்கும் அவசிய தரப்பினர் என்று குறிப்பிட்டு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர், அவரது உரிமையை மேற்படி மாவட்ட நீதிமன்ற வழக்கிலேயே நிலைநாட்டிக்கொள்ளவும், பரிகாரம் பெறவும் முடியும் எனவும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அசல்வழக்கிலும், இடைமனுக்களிலும் உரிய பரிகாரங்கள் கிடைக்கக்கூடாது என்பதற்காக 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு இணக்கமாக உள்ள மனுதாரரை தூண்டி பெயர் இரவல் பெற்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், 3 ஆம் நபர்/மனுதாரர் இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினர் அல்ல என்றும், 3, 4 எதிர்மனுதாரர்கள், அசல்வழக்கினை இழுத்தடித்து காலம் கடத்துவதற்கு 3 ஆம் நபர்/மனுதாரரை தூண்டிவிட்டு இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே இம்மனுக்களை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.** இந்நிலையில் இவ்வழக்கு கோப்பினை பரிசீலிக்கையில் 1, 2 எதிர்மனுதாரர்கள், 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாவா சொத்துக்களை பொறுத்து விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்து இடைமனு எண்.596/2022 மற்றும் 597/2022 ஆகிய இரண்டு இடைமனுக்கள் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அசல்வழக்கு மற்றும் இடைமனு எண்கள்.596/2022, 597/2022 ஆகியவற்றிற்கு எதிர்மனுஉரைகள் மற்றும் எதிர்கோருரிமையும் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இரண்டு இடைமனுக்களுக்கான வாதுரை முடிக்கப்பட்டு, 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பு வாதுரைக்காக இடைமனு எண்கள்.596/2022,597/2022 ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மனுதாரர், தாவா சொத்துக்கள் பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்கள் என்றும், 1, 3

எதிர்மனுதாரர்கள், மனுதாரரின் பாகத்தை மோசடி செய்ய எண்ணம் கொண்டு 19.01.2009 ஆம் தேதி பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்தி மனுதாரரின் பங்கு பாத்தியத்திற்கு விரோதமாக மேற்படி பாகப்பிரிவினை ஆவணத்தை ஊர்ஜிதம் செய்யும்வகையிலும் சொத்துக்களில் அவருக்குள்ள பாத்தியத்தை மோசடி செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலும் தங்களுக்குள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மனுதாரர், அவருக்கு உள்ள பாகத்தை பிரித்து தர கோரியும், பழனி கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.390/2022 நிலுவையில் இருந்து வருவதாகவும், மனுதாரர் தாவா சொத்துக்களில் 1/3 பங்கு பாத்தியம் உள்ளதால் அசல்வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் என்றும், அசல்வழக்கில் தன்னை 3 ஆம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிட கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மனுதாரர், 1, 3 எதிர்மனுதாரர்களின் உடன்பிறந்த சகோதரி என ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரருக்கு நீண்டகாலத்திற்கு முன்பே திருமணம் செய்து கொடுக்கப்பட்டு தகப்பனார்வழி பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து எவ்வித பாத்தியமோ, பாகமோ அவருக்கு தேவையில்லை என்று விலகிப்போய்விட்டார் என்றும், 3, 4 எதிர்மனுதாரர்களின் தூண்டுதலின்பேரில் அசல்வழக்கையும், இடைமனுக்களையும் இழுத்தடித்து காலம் கடத்தவே மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் மனுதாரர் பழனியம்மாள் 1 ஆம் எதிர்மனுதாரர், 3 ஆம் எதிர்மனுதாரர் ஆகியோர்களின் உடன்பிறந்த சகோதரி என்றும், 1 ஆம் எதிர்மனுதாரரும், அவரது மக்களும் 3 ஆம் எதிர்மனுதாரரும் அவரது மகனை பெற்ற தகப்பனார் வழி பூர்வீக சொத்துக்களை 19.01.2009 ஆம் தேதி பாகம் பிரித்துக்கொண்டதாக 1 ஆம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்மனுஉரையில் பத்தி 4–இல் ஒப்புக்கொண்டுள்ளதாலும், 1, 2 எதிர்மனுதாரர்கள் பூர்வீக பொதுக்குடும்ப சொத்துக்களை பொறுத்து அவர்களுக்கு தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர், பொதுக்குடும்ப பூர்வீக சொத்துக்களை பொறுத்து அவருக்குள்ள 1/3 பங்கு பாகத்தை பிரித்து கொடுக்க வேண்டியும், 1, 3 எதிர்மனுதாரர்கள் 19.01.2009 ஆம் தேதி மனுதாரரின் உரிமைக்கு எதிராக ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் செல்லத்தக்கதல்ல என்று விளம்புகை பரிகாரம் கோரி பழனி கூடுதல் மாவட்ட

நீதிமன்றத்தில் அசல்வழக்கு எண்.390/2022 தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது என்றும், எதிர்மனுதாரர்கள் தங்களுக்குள் ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணத்தினை ஊர்ஜிதம் செய்யும்வகையிலும், சொத்துக்களில் மனுதாரருக்குரிய பங்கு பாத்தியத்தை மோசடி செய்ய வேண்டுமென்ற எண்ணத்திலும் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்திற்கொண்டும், வழக்கின் தன்மையை கருத்திற்கொண்டும் நீதியின் நலன் கருதியும் மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து இவ்வாறு மேற்கண்ட பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் விடையளிக்கின்றது.

**10. இறுதியாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு மனுதாரரை அசல்வழக்கில் 3 ஆம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2023–ஆம் வருடம் மார்ச் மாதம் 16 ஆம் நாள்** என்னால் இந்நீதிமன்ற அவையில் பகரப்பட்டது.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2023.03.16 18:44:44 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

<u>11. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்–இல்லை</u>

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2023.03.16 18:44:50 +0530

சார்பு நீதிபதி,

ஒட்டன்சத்திரம்.

I.A.No.119/2023 in
O.S.No.944/2022
Sub Court,
Oddanchatram.
16.03.2023
Order (Fair/Draft)